# ஆத்ம ஜோதி



ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான்
அவர்கள் திருப்பனந்தாள்

# ஆத்ம ஜோதி

ஓர் ஆத்மீக மாத வெளியீடு

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவனே
எல்லா உடலும் இறைவன் ஆலயமே—சுத்தானந்தர்

| சோதி 8 | துர்முகி௵ சித்திரை மீ 1 ௳ (13–4–56) | சுடர் 6 |
|---|---|---|


## பொருளடக்கம்.


| | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 1 | ஸ்ரீலஸ்ரீ காசிவாசி .......வாழ்த்துப்பாக்கள் | 161 |
| 2 | கங்கைக்கரையில்தமிழ் ஞான முனிவர் | 162 |
| 3 | அறக்கட்டளைகள் | 163 |
| 4 | வாழ்த்துரை | 165 |
| 5 | கனவினில் நன்கு கண்டேன் | 168 |
| 6 | தளரா உறுதியே உயர்ந்தகுறிக்கோள் | 169 |
| 7 | திருமுறைக் காட்சிகள் | 175 |
| 8 | நானும் எனது குருநாதரும் | 179 |
| 9 | அநுமான் | 181 |
| 10 | ஏசுநாதரின் நல்லுரைகள் | 185 |
| 11 | செய்திதிரட்டு | 187 |
| 12 | சிருட்டி மனிதன் | 190 |
| 13 | ஸ்ரீ சுவாமி சிவானந்தரின் பொன்மொழிகள் | 192 |
| 14 | கடைவீதியில் | [கவர் 3ம்பக்கம்] |



## ஆத்ம ஜோதி

ஆயுள் சந்தா ரூ. 75 வருட சந்தா ரூ. 3. தனிப்பிரதி சதம் 30

கௌரவ ஆசிரியர்: க. இராமச்சந்திரன்

பதிப்பாசிரியர்:- நா. முத்தையா

ஆத்ம ஜோதி நிலையம் நாவலப்பிட்டி [சிலோன்]

## ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள் நந்தித் தம்பிரான் சுவாமிகள் மீது

# வாழ்த்துப்பாக்கள்.

ஏழ்மையுடை எளியவர்யாம் இன்தமிழைக் கற்று
ஏற்றமுற வழியின்றி வாட்டமுறும் போழ்தில்
வாழ்வளிக்க எங்களுக்கு வந்ததொரு தென்றல்
வண்டமிழர் குருபரனின் வழிவந்த செல்வன்
தாழ்வகற்றி தலைநிமிர்ந்து தமிழுணரச் செய்தோன்
தன்னேரிலாத தொரு தண்டமிழ்ப் பெரியோன்
வாழ்வளித்த வான்கருணை மழைபொழியும் கொண்டல்
வான்நிலவு போலுயர்ந்த அருணந்தி வாழி!

...சா. தே. கேசவன்,

இசைபொலி திருப்பனந்தாள் எழில்பெறச் சைவக்கூட்டம்
வசையிலா தெங்கும் ஓங்க மாத்தமிழ் வளர்த்தே யன்போ(டு)
அசைவிலாத் தவத்தின்கோலம் அகத்தொடு புறத்தும்கொண்டே
திசைபுகழ் அருணந்திப் பேர்த்தேசிகன் திருத்தாள் வாழ்க.

—வித்துவான் இராமசாமி

பொருளெலாம் அருட்கே யாக்கி புண்ணியச்செயலே செய்து
தெருளெலாம் மனத்துட்கொண்டு தெளிதமிழ் வளர்த்து மக்கள்
மருளெலாம் அகற்றி எங்கள் மாசிலாமணியாய் வாழ்ந்து
அருளெலாங் கொண்டு நின்ற அருணந்தித்தேவ! வாழ்க!

—அப்பர் மட. அன்பர்
(திருப்பூந்துருத்தி)

# கங்கைக் கரையில் தமிழ்ஞான முனிவர்

## ஸ்ரீமத் வித்துவான் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்

### திருப்பனந்தாள்.

உலகம் உவப்ப ஒருபெரும் இறையாய்
இலகிடும் எங்கள் ஈசன் புகழினைப்
பரப்பிட நெல்லைப் பதியினைச் சார்ந்த
கரப்பிலா நகராம் கயிலாய புரத்தில்
சண்முக சுந்தரக் கவிஞரு ருக்குத்
திண்ணிய கற்புடைச் சிவகாமி யம்மைபால்
செந்திற் குமரன் திருவருள் வலத்தால்
நந்தம் குமர குருபரன் உதித்தது,
பெற்றவர் வருந்தவும் பேசா திருந்து
நற்றமிழ்க் கந்தர் கலிவெண்பாவால்
செம்மைக் கவிநலம் சிறப்புற வமைத்து
இம்மையில் அவனரு ளெய்தப் பெற்றது.
மதுரைமா நகரில் மங்கை மீனுட்சியின்
மதுசேர் பிள்ளைத் தமிழ்நா வியற்றி
அரசன் திருமலை அமைத்திடு மவையின்
அறங்க மேற்றிட அன்னையாம் கயற்கனி
மணிசேர் மாலையை மாண்புறச் சூட்டவும்
அணிசேர் விருதுகள் அரசனுல் ஏற்றது,
தீதிலாக் கலம்பகம் மும்மணிக் கோவை
நீதிசேர் நெறியினை விளக்கிடு நாலும்
நான்மணி மாலையும் செய்யுட் கோவையும்
மாண்புகழ் விளங்க உலகுக்கு அளித்தது.
விண்புகழ் விளக்கம் விளைந்திடு மணியாம்
தண்புகழ் வீசிடும் தவமா சிலாமணித்
தவனடி சார்ந்தே தன்னிலை யழிந்து
சிவனடி சாரும் சிந்தையை அடைந்தது,
நந்தம் மொழியும் நலஞ்சார் கொள்கையும்
இந்நிலை யுலகம் யாங்கணும் பரப்பக்
காசினி புகழும் காசிமா நகரின்
ஆசிலாக் கங்கை அமைந்திடு கரையில்
உறுதி சாரும் ஒருபெரு நிலையமும்
இறுதியாக வெடுக்க வெண்ணியது,
அன்னியக் கொள்கை அரசாம் பாதுஷா
மன்னிய அவையில் மதிநலங் காட்டி
வேண்டிய நிலனும் விரும்பிய பொருளும்
ஆண்டகை பெற்ற அவனியில் வந்திடு
மக்கள் யாவரும் மாண்புக ழெய்தத்
தக்கநல் லறமும் தமிழும் வளர்த்தது:

—[குமரகுருபரன்]

# அறக்கட்டளைகள்.

(ஆசிரியர்)

அறம் அருகி, மறம் பெருகி வரும் இக்காலத்தில், 'அறக்கட்டளைகள்' என்ற சொற்றொடரைக் கேட்பது அருமையில் அருமையாகும். வள்ளுவர் மரபில் வந்த தமிழர்,

'ஆற்றுவார் ஆற்றல் பசி ஆற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின்பின்'

என்னும் அவர் திருவாக்கை மறக்கத்தொடங்கி விட்டார்கள். அம்மட்டோ! ஏழைகட்கு உணவு அளிக்கும் வழக்கத்தால் சோம்பேறிப்பட்டாளம் பெருகும் எனக் கூச்சலிடும் தீவிர முற்போக்காளர்கூட உளர்; இந்த நிலையில், நமது முன்னோர்கள் போற்றிய 'முப்பத்திரண்டறம்' என்ற முக்கிய விஷயத்தைத் தமது செயலால் நமக்குச் சதா நினைவூட்டிய வண்ணம் ஒரு புண்ணிய புருஷர் தென்னாட்டில் இன்று வாழ்வது சைவர்களாகிய தமிழர்களின் தவப்பயனாகவேயென்பதைக் கூறவும் வோண்டுமோ? நாம் இங்கு குறிப்பிடுவது திருப்பனந்தான் காசி மடத்தலைவரான ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள் நந்தித்தம்பிரான் சுவாமிகளையென்பது வாசகர்கட்கு நன்கு விளங்கும். அம் மகாத்மாவின் திருமுகப்பொலிவே இம்மாச ஜோதியின் அட்டைக்கு அழகும் தூய்மையும் அளிக்கின்றது.

இப்பெரியார் காசி மடத்தின் குருபீடப்பதவியை ஏற்றது இற்றைக்குப் பன்னீராண்டுகட்கு முன்னராகும்: இக்குறுகிய கால எல்லைக்குள் அவர் வரையாது வழங்கியுள்ள அறங்கள் அளப்பில. அவைகள் குமரி முனையிலிருந்து இமய முகடுவரைக்கும் பரவியுள்ளன: அன்னதானம், வித்தியாதானம், ஆலயத்திருப்பணி, திருமுறைவெளியீடுகள், தேவார திருவாசகப் பரிசுகள், சைவநூற் பதிப்புகள், திருப்பதிகக்கல்வெட்டுக்கள், சிவ, சிவ மின்விளக்குகள், அறவைதப் பள்ளிகள் என விரிந்துள்ளன. இந்தியாவிலுள்ள சர்வகலாசாலைகள் அனைத்தும் காசி மடத்தின் நன்கொடை பெற்றுள்ளன சமயப் பிரசாரத்தின் பொருட்டு; சுருங்கக் கூறின், ஐம்பது லட்சம் ரூபாய் மதிப்புள்ள இருநூறு அறக்கட்டளைகளை சுவாமிகள் இதுவரையில் ஏற்படுத்தியுள்ளார். அவரின் கொடை சாதி சமயம் மொழி முதலாய எல்லைகட்கு அப்பாற்பட்டதுமாகும். பள்

ளிவாசல் கட்டக் கூடப்பண உதவி செய்துள்ளார்கள். குறித்த மொத்தம் இருநூறு கட்டளைகளுள், நாற்பதுக்குமேல்: ஆதி குமரகுருபர சுவாமிகளின் திருநாமத்தை நினைவூட்டும் முறையில் அமைந்துள்ளன.

தர்மபுரம் ஆதினம் ஸ்ரீலஸ்ரீமகா சந்நிதானம் அவர்கள் சுவாமிகளைப்பற்றிப் பேசும் பொழுதெல்லாம் "நமது கண்மணியிற் சிறந்த நன் மணியாகிய திருப்பனந்தாள் காசிமடம் ஸ்ரீலஸ்ரீ அருள் நந்தித்தம்பிரான் சுவாமிகள்" எனக்குறிப்பிடுகிறார், அப்பெரியார் அண்மையில் செய்த பிரசங்கம் ஒன்றின் சாரத்தை இக்கட்டுரையைத் தொடர்ந்து வெளியிடுகின்றோம்,

ஸ்ரீலஸ்ரீ அருள் நந்தித்தம்பிரான்சுவாமிகள் செய்துள்ள அறச்செயல்கள் அற்புதமாய் இருப்பதுபோலவே, அவரது வாழ்க்கை வரலாறும் அற்புதமானதாகும். இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே, திருநெல்வேலியை அடுத்த அரிய நாயகபுரம் என்னும் கிராமத்தில் தோன்றியசுவாமிகள் அவர்கட்கு இவ்வருஷத்தில் (1956) ஐம்பத்தாறுவதுவயசுபூர்த்தியாகின்றது. குருபரம்பரையில் அவர் கொலுவீற்றிருக்கும் பதவியும் இருபதாவதுஇலக்கத்தைக்கொண்டதாகும். இரண்டாவது உபகபுத்த காலத்தில் பட்டாளத்தைச் சேர்ந்திருந்தவரை: அண்ணாமலையப்பன் ஆட்கொண்டவிதமும், பின்னர் தர்மபுரம் ஆதீனத்தலைவராக வரவேண்டியவரைத் திருவருள் காசி மடத்தில் சேர்த்தவிதமும் அற்புதத்தில் அற்புதமானவையாகும். இக்காரணங்கள் பலவற்றைக்கொண்டு. அவரை இருபதாம் நூற்றாண்டுக்குமரகுருபர ஞானிபாரென அழைத்தலே முற்றிலும் பொருத்தமானதாகும். திருக்குறள், கந்தர் கலி வெண்பா, நீதிநெறி விளக்கம் முதலாய நூல்களை அவர்கள் ஆங்கிலத்தில் மாத்திரமல்ல ஹிந்தியிலும் மொழிபெயர்ப்பித்து வழங்கியிருப்பது, காசிமட ஸ்தாபகரின் லட்சியத்தையே விளக்குகின்றது,

*குமரிமுதல் இமயம்வரை சிவநெறியைக் காத்த*
*குருபரனின் திருநாமம் என்றென்றும் வாழி!*
*அவர் பெயரை அறப்பணியால் நினைவூட்ட வந்த*
*அருள் நந்தி திருநாமம் எப்போதும் வாழி!*

தருமபுர ஆதீனத்துக்குச் சொந்தமான

*திருப்பனந்தாள் அருணசடேசுவரசுவாமி தேவஸ்தானத்தின்*

நூலகம்-அலுவலகக் கட்டிடத் திறப்பு விழாவில்

**தருமபுரஆதீனம் இருபத்தைந்தாவது குருமகாசந்நிதானம்**

**ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய**

**சுவாமிகள் அவர்கள் அருளிய**

# வாழ்த்துரை.

இன்று ஒரு சிறந்த நல்ல புனிதமான நாள். இது ஏன் புனிதமான நாள் என்ற எண்ணம் எழலாம். தமிழ் நாட்டிலே வாழ்ந்த தமிழ்ப் பெரியார், ஞானப்பெரியார், உயிர்த்துணையாயிருந்தபெரியார். அவர்யாரென்றால்தமிழ்படித்தமாணவர்களுக்கும் பேராசிரியர்களுக்கும்தெரியும்என்பது திண்ணம்.அவர்தாம் குமரகுருபர சுவாமிகள் அருளிய நூல்கள் பலவும் உயர்ந்த நூல்கள். மெய்ப்பயிர் தழைக்கமயலும் உயிருக்கு உறுதுணையாகும் நூல்கள், அவர்கள் பரம்பரையில் வந்த அருணந்தி சுவாமிகள் தம் திருக்கரத்தாலே இந்த நூலகமும் அலுவலகக் கட்டிடமும் திறக்கப்பெற்றன. எங்கள் குமரகுருபர சுவாமிகள் ஒருபெரியநூலகம் செய்தார்கள்.பதினான்கு சாத்திரங்களைப் பதினான்குபிரபந்தங்களைச்செய்தார்கள். அவற்றின் புகழ், எங்கே? தமிழ் நாட்டில் மட்டுமா?இமயம்வரைபரவியுள்ளது. ஏன் ஒவ்வோர் உள்ளத்திலும் உயிர்ப்பயிர் தழைக்க வேண்டும்:ஞானப்பயிர் தழைக்கவேண்டும்என்றபெருங்கருணையால், செந்தில் முருகன் திருவருளால் செய்த நூல்கள். அந்த நூல்களுள் ஒன்று ஞாபகத்துக்குக் கொண்டுவருகிறேன். பொதுவாக மக்களெல்லாம் மதம் என்றால் ஒரு மயக்கத்தைத்தரும் மருந்து என்று நினைக்கிறார்கள்; பகுத்தறிவுக்கு முட்டுக்கட்டை என்று எண்ணுகிறார்கள். அது முற்றிலும் தவறுஎன்பது யாரும் மறுக்க-மறுக்க முடியாது; மறக்கவும்முடியாது; மறத்தல்-மறுத்தல் இரண்டும் முடியவே முடியாது.பண்டாரமும்மணிக்கோவை என்னும் நூலும் தருமைக் குருமாசிலாமணி தேசிகஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்இடத்தில் அருள்பெற்ற குமரகுருபர சுவாமிகள் பாடியருளியது என்பதை அறிவீர்கள்.

அவர்கள் அதில் 'பல்லுயிர்த் தொகுதியும் பயன்கொண்டுஉய்க' என்ற, எல்லா உயிர்களுக்கும் குறைவிலா வாழ்க்கை உண்டாக வேண்டுமென்ற பொதுமை நோக்கை வெளிப்படுத்தியிருக்கிறார் கள். "குறைவிலாது உயிர்கள் வாழ்க" என்பதே அது. எங்கள் ஞானசம்பந்தரும் தரவில் சராசரங்கள் எல்லாம் சிவம் பெருக்கும் பிள்ளையாராய்த் திருவவதாரம் செய்தார்கள் என்று எல்லா உயிர்க ளுக்கும் பொதுவாயிருக்கும் உண்மையைச் சேக்கிழார்சுவாமிகள் தெரிவித்திருக்கின்றார். அந்த முறையில் பல்லுயிர்த் தொகுதி யும் பயன்கொண்டு உய்க என்று எங்கள் மாசிலாமணி தேசிகரை வாழ்த்திய வாழ்த்தில் அருளினார் என்றால் அவருடைய பரந்த உள் ளத்தின் பெருமையை என்னென்று சொல்வது? சுத்த மாயை யாகிய வயலிலே அருளாகிய விதையை இட்டார், பாருங்கள்! அரு ள்விதை இப்போது இந்தக்கால விதைகளெல்லாம் பிறவிக்கு ஏது வாகிய விதைகள். பிறவிகளைப் போக்கவல்ல ஒரு ஞானவிதையைத் தருகின்ற கருத்தை இதில் காணலாம். குடிலை வயலில் அருளா கிய விதையை இட்டு, கருணையாகிய நீர்ப்பாய்ச்சி, வேதமரத்தை வளர்த்தார் குருநாதர். அம்மரத்தில் இலையும் தளிரும் அரும்பும் மலரும் பிஞ்சும் காயும் தோன்றின. அவற்றுள் ஒவ்வொன்றைக் கொண்டு மகிழ்வது போன்றவை சமயங்கள். அதன் பழத்தை வேதாந்தம் என்பர். அது ஆரா இன்ப அருங்கனி, அதைப் பிழி ந்த சாரமே சைவ சித்தாந்தம். அச்சித்தாந்தத்தைச் செந்நெறியில் நின்றுஒழுகும் எங்கள் அடிகளார் கருணையே வடிவமாக இருப்ப வர்கள்: குணமென்னும் குன்றின் மேல் நிற்பவர்கள்: சினத்துக் கும் அவர்களுக்கும் வெகுதூரம்: அவர்கள் உள்ளமோ தாயன்பு நிறைந்தது. கேதார யாத்திரையிலே "பால் நினைந்தூட்டும் தாயி லும் சாலப் பரிந்து." குருபக்தியைப் பலஇடங்களில் பலவேறுவகை களில் வெளிப்படுத்தி, உள்ளம்உருகச் செய்துவிட்டார்கள். அங்கே உடனிருந்து கண்டவர்கள் 'இவர்களோ இப்படி நடந்துகொள்ளு கின்றார்கள்? இவர்களுக்கு இருக்கும் குருபக்திதான் என்னே!' என்று வியந்தும் புகழ்ந்தும் மகிழ்ந்தார்கள்.

இவர்கள் உள்ளம் சிவபிரான் திருவடிக்கே பதித்த நெஞ்சு. 'நந்தி நாமம் நமச்சிவாயவே' என்பது திருமுறை. இவர்கள் நாம மும் அருள்நந்தி. இந்த அருள்நந்தி அந்த நந்தி நாமத்தைச் சொல் லிக்கொண்டே இருக்கின்றார்கள். இவர்கள் எப்பொழுதும் 'ஹர

ஹர' 'சிவசிவ' என்று நினைத்தும், சொல்லியும், எழுதியும் வருகின்றார்கள்: சிவ சிவ' என்றே கையெழுத்திடுவார்கள். உண்ணும் போதும், உறங்கும்போதும், நனவிலும் கனவிலும், சிவ சிவ என்னும் திருப்பெயரே சொல்லி வருவார்கள். இடையருப்பேரன்புடையவர்கள். இடுக்கண் வருங்கால் நகுக, அதாவது துன்பம்வருங்கால் சற்றே நகுக என்றார் திருவள்ளுவர்: எங்கள் அருள்நந்திமுனிவர் அதனையும் கடந்து மேலான நிலையில் விளங்குகின்றார்; சிரிக்காதே தம்பி சிவ சிவ ஹர ஹர என்று சொல் வந்த துன்பம் வழிதெரியாமல் போய்விடும்' என்பார்கள். நான் கதை சொல்லவில்லை. பிரசங்கம் செய்யவில்லை. இவர்களுடன் கேதார யாத்திரையிலே அனுபவித்த நிலையை—அறிந்த உண்மையைச் சொல்லுகின்றேன்: ஏட்டுச்சுரக்காய் கறிக்கு உதவாது: அனுபவந்தான் சிறந்தது. நாங்கள் கேதார மலைஏறுகின்றோம். மழை அதிகமாகக் கொட்டுகின்றது: இன்னும் எவ்வளவு தூரம் இருக்குமோ என்றுஎண்ணி அஞ்சக்கூடாதென்று; 'ஹர ஹர சிவ சிவஇதோ வந்துவிட்டது கேதாரம், நெருங்கிவிட்டது கேதாரம்' என்று நந்தி நாமத்தை, சிவ சிவ என்று சொல்லிக்கொண்டு பேரன்பால் உருக்கத்துடன் மலையேறி வருவார்கள்; நல்ல அன்புடைய பழைய அடியவர்க்கு அடையாளம்: மீனாட்சியம்மன் பிள்ளைத் தமிழிலே எங்கள் குமரகுருபர சுவாமிகள்,

"உருகி உருகி நெக்கு நெக்குஉள்
உடைந்து கசிந்திட்டு அகம்புஊறும்
உழுவல் அன்பின் பழ அடியார்
உள்ளத்தடத்தில் ஊற்றுஎடுத்துப்
பெருகு பரமானந்த வெள்ளப்
பெருக்கே... ...... ..."

என்று பாடியிருக்கிறார்கள், உழவலன்பு—ஏழுபிறப்பும் தொடர்ந்து வரும் அன்பு. அதற்கேற்பப் பழஅடியார் என்ற உண்மையும் அறியத்தக்கது, எங்கள் அருள்நந்தி சுவாமிகள் முற்பிறவிகளிலே தொடர்ந்துவரும் பேரன்பினல் பழ அடியாரே யாவர். அதனல் எங்கள் குமரகுருபர சுவாமிகளே பழஅடியார்க்குச் சொல்லிய இலக்கணங்களைக் கொண்டு எங்கள் அருணந்தி சுவாமிகளாக மீண்டும் தோன்றியிருக்கின்றார்கள், இதை யாரும் மறுக்கவேமுடியாது! மறக்கவே முடியாது.

# கனவினில் நன்கு கண்டேன்!

*சாகித்ய வித்வரத்நம் "அகிலா கதன்"*

(இராகம்-ஏமவதி) [தாளம-ஆதி]

பல்லவி

கனவினில் நன்கு கண்டேன்!—கனகவேல்
கரமினிர் கருணையாம் உருவான கந்தனென் [கனவினில்]

அநுபல்லவி

நினைவெனும் தடமலர் பூத்தமா மலர்போல்
வினையிருள் போக்கி ஞான விளக்கினை யேற்றவே [கனவினில்]

சரணம்

அன்பர் தாம் கூடியே அஞ்சலி புரியவே!
ஆறுமுகச் செங்கனி வாயிதழ் அரும்பவே!
"சின்பெருந் துயர்கள்தாம் நீங்குதெ"ன் றருளயே
நீறினை வாரியென் நெற்றியில் பூசவே! [கனவினில்]

தேவகுஞ் சரியுடன் தினைப்புன வள்ளியும்
திருவளர் நடமயில் திகழருங் காட்சியும்
பூவலம் கடிதினில் போய்வரும் மாட்சியும்
புகன்றெனைப் புத்தொளி யாக்கிய சாட்சியும் [கனவினில்]



# தளரா உறுதியே உயர்ந்தகுறிக்கோள்

...(சோ. பரமசாமி)...

குறிக்கோளில்லாது வாழும் மக்களை இம்மானிலத்தில்யாருங் கண்டதுண்டா? என்றால் "உண்டு" என்றும், "இல்லை" என்றும் விடை கிடைக்கும். இதனை நாம் ஊன்றி நினைக்கின் அதன் உண்மை ஓரளவு வெளிப்படும். குறிக்கோளில்லாத மக்கள் வாழ்வார்களேயானால் அவர்களை மானமுடையவர் மதிக்கயாட்டார்கள் இவ்வுலகில் வாழும் மக்கள் எப்படி வாழ்கிறார்கள்? என்னநோக்கோடு வாழ்கிறார்கள்? எதற்காக வாழ்கிறார்கள்? என்றின்னோரன்ன பல வினாக்களை எழுப்பின் "நாமு மேன் மற்றவர்களைப் போல் வரமுடியாது? நாமேன் அழியாப்புகழை நாட்டக்கூடாது? நாமேன் நல்லவர்களாக இருக்கவியலாது"என்றெல்லாம் எண்ணத் தொடங்கி விடுகிறார்கள். அடுக்குத் தொடரிலே, செவிக்கினிய மொழியிலே குறிக்கோளால் உயர்ந்தவர்கள் சிலத்தைப் பேசுகின்ற பொழுது நம்மில் பலர் "நாமும் அவ்வாறு ஆகவேண்டும்" என்று அவசரத்தீர்மானம் போட்டுக்கொள்வார்கள். ஆனால் நடப்பதென்ன?" பொய்யாய்ப் பழங்கதையாய் மெல்லப் போனதுவே" என்றபடி மறுநாள் உதயத்தின்போது தாம் எண்ணியஎண்ணமெல்லாம் மறந்து பழைய பல்லவியையே பாடத்தொடங்கிவிடுகின்றார்கள். என்னே இவர்தம் அறியாமை! இவ்வாறு மக்கள் நடப்பதற்குக் காரணம் குறிக்கோளைப்பற்றிக் கவலைப்படாமல் இருப்பது தான்.

உளதத்துவத்தை ஆயப் புகுந்த அரிஸ்ரோட்டல் என்ற பெரியார் "மனிதன் மிருக இனத்திலிருந்தே வந்தவன்" என்றார். ஆம் மனிதன் சிந்தனை செய்கின்ற வோருயிரினமாவன். மனிதன் தன் சிந்தனையினால் நல்லதை நாடி மனச்சான்றின்படிநடப்பவன். உண்மைக்காக உழைப்பவன். எதிர்காலச் சந்ததிக்கும் வாழ வழிவகுத்துக்காட்டுபவன். எனவே, நிலைபேறுள்ள வாழ்வை நாம் காண வேண்டும். இதற்குக்குறிக்கோள் இன்றியமையாமல் வேண்டப்படுமென்பதில் ஐயமில்லை. குறிக்கோளில்லாது வாழ்பவர் வாழ்க்கையைச் சமரசசிலராகிய தாயுமான சுவாமிகள் "யோசிக்கும் வேளை

யில் பசிதீர உண்பதும் உறங்குவதுமாய் முடியும்" என்று கூறுகின்றார். எனவே, நாம் வயிறு புடைக்க உண்பதற்காக வாழ்கின்றோம், என்ற பழிச்சொல்லினைச் சுமந்து வாழுதல் அறிவுடைமையாகாது. வாழ்க்கையோ நிலையில்லாதது. நாளென ஒன்றுபோற்காட்டி உயிரீரும் தன்மையது. ஆகவே, இறந்திடவரினும் குறிக்கோளைக் குலையாது வாழ்ந்த குணவான்களை ஆயப்புகுதல் ஏற்றதாகும்.

போர் முனையிலே "மேவலர்க்கரிய வீரரையெல்லாம் வெல்லுவேன்" என்று வீரவுரை வளங்கி நிற்கிறான் அருச்சுனன். போருக்குவந்தவர்களை உற்று நோக்குகிறான். தந்தைமாரும், பாட்டன்மாரும், உடன் பிறந்தகரும், மெய்ஞ்ஞானம் அளித்தவரும் ஆருயிர்நண்பரும், ஆன்றோரும் அமர்க்களத்தே நிற்கக்காண்கிறான். எம்போன்றவர்கள் சினம் தலைக்கேறிச் செய்வதின்னதென்றறியாத நிலையில் நிற்கும் பொழுது எம் கண்ணெதிரே எமது அன்பிற்குரியவர்களைக் கண்ணுற்றால் யாது செய்கின்றோம்? கையும் மனமும் சோர வாழாநிற்கின்றோம். நாம் அவ்வாறு மனமுருகி நிற்போமெனின் அருச்சுனன் மட்டும் அதற்கு விலக்கானவனா? இல்லையென்றுதான் கூறவேண்டும். அதனால் அவன் கையிலிருந்த காண்டீபம் நழுவிக்கீழே வீழ்ந்தது. உடல் வெதும்பியது. மனம் நடுங்கியது. முகம் வாடியது. இந்நிலையில் அவன் தன் குறிக்கோளை இழந்துவிட்டான். அப்பொழுது அருகேநின்றபகவான் அருச்சுனனை நோக்கி "இது உன்போன்றவர்க்குத்தகுதியன்று" என்று இடித்துரைத்துக் கீதையிலே கூறுகின்றார். மாற்றாரை வெல்லுவதாக வஞ்சினங் கூறிப் புறப்பட்ட வீரன்பேதையர்போல்வில்சோர நிற்பது பேதமையன்றோ! எனவே தான் "உன் குறிக்கோளைச் செய்" என்றுஉபதேசித்தார் பகவான்.

நாம் வசதிவாய்த்த காலத்தில் எதனையும் சாதித்து விடுகின்றோம். அதனால் நாம் நிறைதிறம்பா நேர்மையாளர் என்று வாய்வீரம் பேசுதல் அழகாமோ! இதோ ஓதா துணர்ந்த செல்வக்குழந்தையின் திடமான உறுதியைப் பாருங்கள்.

"இடரினுந் தளரினும் எனதுறு நோய்
தொடரினு முன்கழல் தொழு தெழுவேன்"

என்ன திடமான உறுதி! இது ஞானப்பாலுண்ட ஞான சம்பந் தப்பிள்ளையின் குறிக்கோளெனின் நாம் அதனையிட்டுச் சிந்தியாதி ருத்தல் சிறப்பன்று.

உண்மையைக் காப்பதே தன் உறுதியானகுறிக்கோள் எனக் கொண்டான் அரிச்சந்திரன் என்ற மன்னன். அதனால் அம்மன்ன வனின் உறுதியைக்குலைத்து, அவனைச் சோதிக்கத் திட்டமிட்டார், கௌசிகர் என்ற முனிவர். முனிவரின் வஞ்சனையினால் மன்னன் நாடிழந்தான். நகரிழந்தான். பாலனையிழந்தான். படைத்த நிதி யிழந்தான். சத்தியத்தின் சோதனையிற் தலைப்பட்டான். ஈனத்தொ ழில் புரியும் நீசனுகவும் மாறினன். மயானத்தில் விதிசெய்த விந்தை யால் அறத்தைக் காப்பதற்காக மனையாளை வெட்டுதற்கு கையில் வாளெடுத்தான். அந்நிலையில் கௌசிகர் சத்திய சோதனை செய்யக் குறுக்கிட்டார். அவர் நீசத் தொழில் புரிந்து உண்மையை நிலை நாட்ட வந்த அவ்வுத்தமனை நோக்கி "நீ கொடுத்த வள நாட்டைக் கொடுத்திலே னெனக் கூறுவையேல். வளநாடுஞ் சுற்றமும் உன தன்றோ!" என்று ஆசைவார்த்தைகள் செப்பினர். இவ்வார்த்தை கள் சத்திய வேந்தனின் செவியிலே நாராசம் வார்த்தது போல் இருந்தன. அதனால் முனிவனை அமர்ந்து நோக்கி "கதியிழக்கிலும் கட்டுரை யிழக்கிலேம்" என்றான். இது கேட்ட முனிவர் மதியிழந்து வாயிழந்து அப்பால் மறைந்து சென்றார். இதனால் அம்மன்னன் கொண்ட உண்மையே உறுதியான குறிக்கோள் என்பது விளங்கு மன்றோ!

இன்னும். வீரமகேந்திரத்தில் அரசு வீற்றிருந்த சூரன் முருக வேளோடு மாயப் போர் புரியத்துணிந்தான். அவன் கண்ணெதிரே முருகவேள் தோன்றினர். முருகன் அழகுத் தெய்வமன்றோ! முரு கனின் குண்டல நிரையும், செம் பொன் மௌலியும், கோலமார் பும், இலங்கெழில் படைகள் யாவும் அவன் கண்களிற் பட்டன. அண்ணலார் மேனி அடிமுதல் முடியுற எண்ணிலா ஊழிகாலம் நோக்கினலும் கண்ணினில் அடங்காதன்றோ! எனவே அவர்கமல பாதங்களைத் தொழுதிடத் துணிந்தான். தீமையகன்று முருகவேளு க்கு ஆளாக எண்ணினன். ஆனல் "துறந்திடேன்பிடித்தகொள்கை" என்ற உறுதி பூண்ட உள்ளத்தை உடையவன். அதனால் அவன் நெஞ்சை மானம் தடுத்துநின்றது. மானத்தைக் காக்கத் துணிந்த

சூரன் முருகனின் வேல்பட்டு மாண்டான். எதற்காக? தான் பிற ருக்குப் பணிந்து வாழேன் என்ற குறிக்கோளுக்காக.

இவ்வாறே அரக்கர் தலைவனான தசக்கிரீவன் இராமபிரானோடு நெடும் பொழுது கடும் போர் புரிந்தான். தன் புயவலியும், படை வலியும் இழந்தான். வெறுங்கையோடுஇலங்காபுரிக்கு நடந்துசென் றான். பாட்டனான மாலியவானுக்கு இராமனின் வலிமையையும் அவன் அங்க நலன்களையும் அழகொழுகக்கூறினான். இராமனின் வலிமையை உள்ளவாறு உணர்ந்தவன் இராவணன். அப்படியுண ர்ந்தும் தன் மைந்தனான மேகநாதனுக்குக் கூறுகின்றகூற்றில்அவன் குறிக்கோள் எமக்குப்பட மெடுத்துக் காட்டுகின்றது. அவன்மரண பரியந்தம் புகழுக்காகவே வாழ்ந்தவன். புகழெனின் உயிருங்கொ டுக்கும் பெற்றியன்

"மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீ இத்தாம் மாய்ந்தனர்",

என்ற புறப்பாடலுக்கு இலக்காக வாழ்ந்தவன்; இராமனின் வலி மையைக்கண்டு தான் இறப்பது உறுதியே என்று உணர்ந்தான். அதற்காக அவன் அஞ்சினானல்லன். தன் புகழ் இராமனுள்ளவரை நிலை பெற வேண்டுமென்றே ஆசைப்பட்டான். அதனால் மகனை நோக்கி "இன்றுளார் நாளை மாழ்வர் புகழுக்கும் இறுதியுண்டோ" என்று தன் குறிக்கோளை எடுத்தியம்பினான். இறுதியில் அரக்கர் கோன்இராமனின் சுடுசரத்தால் மாண்டொழிந்தான். ஆனால்அவன் மாற்றருக்கு அடிமையாகி வாழ இசையாத பெருமை இராமன் பெயர் நிற்குமளவும் இவ்வுலகில் நிலைபெறும் என்பதில் ஐயமில்லை

குறிக்கோளை நாம் எவ்வழியில் பயன் படுத்துகிறோமோ அவ் வழியில் எமக்குப் பெருமையும். புகழும் கைகூடும். குறிக்கோளை ஆணவத்திற்கு அடிமைப் படுத்தியதால் இராவணனும், சூரனும் மாண்டொழிந்தார்கள். அவ்வாறன்றி, ஆண்டவன் சேவடியைச் சேவிப்பதே குறிக்கோளாகக் கொண்டுய்ந்த அடியார்களை ஈண்டு பேசாதிருத்தல் இயலாது.

நாம் எண்ணிய எண்ணம் முற்றுப்பெறும்வரை எமது குறிக் கோள் முற்றுறாது. குறிக்கோளை அடையும்வரை எத்தனையோ

தடைகள் குறுக்கிடும். அத்தடைகளைக்கண்டு தள்ராத உறுதியான உள்ளம் வேண்டும். இதோ சேக்கிழார் காட்டுகின்ற உறுதியான உள்ளத்தைப் பாருங்கள்.

"வாழுநாயகன் கயிலையில் இருக்கைகண் டல்லால்
மாழுமிவ்வுடல் கொண்டுமீளேன். ........."

என்ற உறுதி கொண்டு ஆண்டவனைக் காணவேண்டுமென்று ஆசையோடு புறப்பட்டார். அப்பமூர்த்தி. அப்பரோ வயதால் முதிர்ந்தவர். ஆண்டவனைக் காண்பதே தன் குறிக்கோள் என்ற காரணத்தால் இரவு பகலில்லாது கடு நடை நடந்து சென்றார். அவர் கால்கள் இளைத்தன. கைகளும் தேய்ந்தன. உடம்பால் உருள்வதற்கும் முடியாமல் அசைவற்றுக் கிடந்தார். இத்தகைய பரிதாபக் காட்சியைக்கண்ட உமையம்மையின் உள்ளம் துடிதுடித்தது. அம்மையும் ஐயனை வேண்டினார். ஐயன் அடியவனைக்காக் கப்புறப்பட்டார். அடியாரின் தளரா உறுதியை உலகிற்குக்காட்ட விரும்பினார். நாவுக்கரசர் முன்பு எம்பிரான் ஓர் முனிவர்போல் தோன்றினார். அவர் நாவுக்கரசரை எழுந்திருக்கச் செய்து "நீர் எங்கே செல்கின்றீர்?" என்றார். அதற்குக்கயிலை நாதனிடம் காதல் கொண்ட உள்ளம் "கயிலை நாதனைக் காண்பதற்கு ஆசைப்படுகின்றது" என்று கூறிற்று. அடியவர்மேற் கொண்ட அன்பினால் நாவுக்கரசரை மேலே செல்லவிடாது தடுக்க முயன்றார் முனிவர் அதனால் அப்பரை அமர்ந்துநோக்கி "நீர் கயிலாயத்துக்குப் போவதாவது? காண்பதாவது? விண்ணவரும் நண்ணமுடியாத இடத்திற்கு நீரோ போகப் போகின்றீர்? திரும்புவதே புத்தி" என்றார். அதுகேட்ட நாவுக்கரசர். "மாழு மிவ்வுடல் கொண்டு மீளேன் என மறுத்தார்" என்பதில் அவர் குறிக்கோள் எமக்குத் தெற்றெனத் தெரிகின்றது. இத்தகையதளரா உறுதியால் காதல்மடிப்பிடியோடும் கண்டறியாத களிற்றினைக் கண்டு களித்த சிறப்பை திருத்தொண்டர் புராணம் ஒருகாற் கேட்டவரும் நன்கு அறிவர்.

இன்னும், பிற்காலத்திலே தோன்றிய பட்டினத்தார் என்ற செல்வச் சீமான், தன்செல்வ மெல்லாம் மாயப்பொருளென்றுணர்ந்தார். அதனால் தன் செல்வ மெல்லாவற்றையும்பலருக்கும்கொடுக்கும்படி கட்டளையிட்டார். துறவறமே நல்லறமெனத் துணிந்தார். ஊரூராகத்திரிந்து இரந்துண்டு வாழ்ந்தார். உண்மைத் துறவியை

உணர்ந்து காப்பாற்றுத சமூகம் அந்நாளிலும் இருந்துதான் வந்தது எனவே அவரை ஆதரிப்பாரின்மையாயிற்று. அவரால் பசிநோய் பொறுக்க முடியவில்லை. அவரோ பொன்னை, பொருளை. பூவையரை பூதலத்தை வேண்டி இரந்தாரன்று. பசித்த நேரம் ஏதாவது வயிற்றுக்கு உணவு கேட்பார். அதுகிடைக்க வில்லையேல் தன்குறிக்கோளை மாற்றத்துணிவாரா? இல்லவே இல்லை! ஓர் தனி இடத்திலே சென்று அமர்ந்துகொண்டார். ஆண்டவனை நோக்கி அசைக்க முடியாதவோர் ஆணையொன்று சொல்கின்றார்:—

"வாசற் படிகடந்து வாராத பிச்சைக்கிங்
காசைப் படுவதில்லை அண்ணலே!"

என்று கூறும் அவரது உறுதி மொழி நாமொவ்வரும் சிந்தித்து மகிழ்தற்குரியதாகும். அவரதுசிறந்த பக்தி வைராக்கியத்தாலன்றோ ஆண்டவனும் அவருக்குச் சிலகாலம் பிள்ளையாக இருந்தார்! இத்தகைய பெருமை படைத்த பட்டினத்தார் உணவு கேட்கும்முறையினைப் பாருங்கள். அவர் எப்படி உணவு கேட்கின்றார்? இருந்த இடத்திலே கொண்டுவர வேண்டுமாம். அதுவும் அன்போடு கொண்டுவர வேண்டுமாம். அன்றேல் தன் தேகம் இளைத்தாலும் வேற்றிடம் செல்வதில்லையாம். இதோ அவர் சொல்வதைக்கேளுங்கள்.

"இருக்கு மிடந்தேடி என்பசிக்கே அன்னம்
உருக்கமுடன் கொண்டுவந்தால் உண்பேன் — பெருக்க
வழைத்தாலும் போகே னரனே யென்தேகம்
இளைத்தாலும் போகேன் இனி"

என்ற அவரது தளரா உறுதி உன்னுந் தோறும் உவகைபயப்பதாகும்

இதுவரை கூறியவற்றிலிருந்து சில உண்மைகள் தெற்றெனப் புலனாகும். எனவே நல்லவும் தீயவும் நாடி ஆயும் மனப்பாங்கு நமக்குண்டு சிறந்த குறிக்கோள் கொண்டு வாழ்ந்து அமரவாழ்வு எய்திய சிலர்களைக் கண்டோம். பேருக்கும். புகழுக்கும் குறிக்கோள் செலுத்தி ஆணவத்தால் மாய்ந்து, தம் பெயரை நிலை நாட்டியவர்களையும் அறிந்தோம், ஆகவே, நாம் நல்லாற்றால் நாடி அரு

## திருமுறைக்காட்சிகள் (9)

[முத்து]

# கரும்பினிற் கட்டிபோல்வார்.

அதிகாலை மூன்று மணிக்கும் ஐந்துமணிக்கும்இடையில்பிரம்ம முகூர்த்தம்என்று மகான்கள் உரைப்பர். ஒரு நாளில்அமைதியான நேரம்அதுவே. தியானத்திற்கு மிக உகந்தநேரமாகும். புறச்சாதனைகள்வேறு எதுவுமின்றி மனம் தானாகவே அமைதி பெறும் நேரமாகும் பகல் முழுவதும் அலைந்த மனது ஓய்வு பெற்றுப் புத்துணர்ச்சியோடு நினைத்ததைச் சாதிக்கவல்ல நேரமாகும். மக்களுள் மூவகையினர். யோகி, போகி, ரோகி, இம்மூவகையினரும் இரவில் விழித்திருப்பவரே. ரோகி ஆற்றாமையினால் விழித்திருப்பான். போகி சிற்றின்பத்தை அநுபவிப்பதற்காக விழித்திருப்பான். யோகி சாதனையை முன்னிட்டு அமைதியை முன்னிட்டு விழித்திருப்பான். ஒரே

முற்பக்கத்தொடர்ச்சி

---

ளாள்கின்ற வழியிலே எம் குறிக்கோளைச் செலுத்த வேண்டும். எண்ணிய எண்ணியாங் கெய்துதற்கு திண்ணிய நெஞ்சினை ஆக்க வேண்டும். இதோ குறிக்கோளை யெய்துதற்கு உறுதிபூண்ட தீரர்களை அழைக்கின்றார் கவியோகி. நாமும் அவரோடு சேர்ந்து அணிசேர அழைப்போம்.

"அஞ்சாத தீரர்கள் அரிபோல வருக
அடிமைத் தளைகளைப் பொடிசெய்ய வருக!
துஞ்சாத பரஞான சூரியர் வருக
சுத்தான்ம நேயர்கள் சுடரோங்க வருக!!"

○ ○ ○ ○

*"எண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்"*

(திருக்குறள்)



காலத்தை மூவர் மூவகையில் பயன் படுத்துகின்றனர். இறைவனை அடைதற்குரியமார்க்கங்கள் நான்காகும். அவை சரியை, கிரியை யோகம், ஞானம் என்பன. சரியாமார்க்கத்தார் விடியற்காலையில் துயிலெழுந்து நீராடி ஆண்டவன் திருக்கோயிலையடைந்து புலர்வ தன்முன் அலகிட்டு, மெழுக்குமிட்டு, பூமாலை புனைந்தேத்தி, புக ழ்ந்துபாடித் தலையாரக் கும்பிட்டு ஆனந்தக்கூத்தாடுவர். இதனையே நாவுக்கரசுப்பெருமான் ஒரிடத்தில்

"பெரும்புலர் காலைமூழ்கி" என்கின்றார்.

விடியற்காலையின் சிறப்பு நோக்கிப் பெரும்புலர்காலை என்றார்,

இறைவரிடத்தே நீங்காத பக்தி கொண்டவர்களுக்கு உலகில் வேறு எவ்வித பற்றும் இல்லை. ஓடும் பொன்னும் ஒக்க நோக்கு வர். உலகத்தவர் எதனை விரும்புவார்களோ அதனை இவர்கள்வெறு ப்பார்கள், உலகத்தவர் எதனை வெறுப்பார்களோ அதனை இவர்கள் விரும்புவர். ஆதலால் உலகமக்கள் இவர்களைப்பார்த்து பித்தர் என் பர், உலகத்துமக்கள் இவர்களைப்பித்தர் என்னும் போது உலகமக்க ளின் அறியாமையை நினைந்து புன்னகை பூப்பர். உலகத்துமக்களி டம் பித்தர் என்ற பெயரை யார் பெற்றார்களோ அதே பேர்வழிகள் எல்லாம் வல்ல இறைவனுக்குப் பித்தன் என்ற பெயரைச் சூட்டி யுள்ளார்கள். சுந்தரர் இறைவனரை அறியாதபோதும்பித்தாபேயா என்றார். யார் என்று அறிந்த போதும் பக்திநிலையில் முதிர்ந்தபோ தும் "பித்தா பிறைசூடி" என்று அழைக்கின்றார். இதனையே நாவுக் கரசர் "பித்தர்க்குப் பத்தராகி" என்றார்.

பித்தராகிய பெருமான் மேல் பக்தி கொண்டவர்களுடைய செயல் தான் என்ன? எவ்வாறு தங்கள் பக்தியை வெளிககுக் காட்டிக் கொள்கின்றார்கள்? இறைவனரது திருக்கோயிலுக்குச் சென்று இறைவனரது திருவுருவிலே இறைவனைக்காண்கின்றார்கள். பேசாத கல்லிலே பேசுந்தெய்வத்தைக் காண்கின்றார்கள். கல்லையே பேசவைக்கும் பக்தியைச் செலுத்துகின்றார்கள், உள்ளத்திலே பே சுந்தெய்வத்தை வெளியிலும் பூசிக்கின்றார்கள். அதிகாலையில் நீர் மூழ்கிப் புத்துணர்ச்சி பெறுகின்றார்கள். பூஞ்சோலைக்குச்சென்று அரும்போடு மலர்களைப்பறிக்கின்றார்கள். எதற்காக இறைவனை.ர அர்ச்சிப்பதற்காக. அரும்பு அன்பு அரும்புவதற்கு அடையாளம் மலர் பக்தி. மலர்வதற்கு அடையாளம், தாயுமானப் பெருந்தகை யார் பூசைசெய்வதற்கு மலர்கள் பறிப்பதற்காக நந்தவனம் சென்

ருர். அங்கு மலர்களைப்பார்த்தார், பார்த்த மலரெல்லாம் சிவம் விளங்கக்கண்டார். அவரது உள்ளம் முழுவதும் சிவபரம் பொருளாகவே நிறைந்திருந்தது. ஆனமையின் பார்த்தமலரெல்லாம் சிவமயமாக விளங்கக்கண்டார். நாவுக்கரசுப்பெருந்தகையும் திருவையாற்றிலே கயிலாயக்காட்சியைக் கண்டு களித்தபோது உலகம் முழுவதுமே சிவசக்திமயமாக விளங்குவதைக்கண்டார். எங்கும் சிவமயமாகக் காணும் பக்குவநிலை வரும் வரை அரும்பொடு மலர்கள் கொண்டு அர்ச்சிக்கும் கிரியாமார்க்கநிலையை அநுட்டிக்க வேண்டியதே. அருச்சுனன் புகழை விரும்பிப் பரமாத்மாவைத் திருப்தி செய்ய, தான் ஓர் பக்தன் என்பதைக்காட்டத்தினமும் சிவபூசை செய்து வந்தான். வீமனோஉள்ளத்துள்ள ஆர்வத்தினால் உலகிலுள்ள பூக்களெல்லாம் இறைவனது திருப்பாதத்திற்கு அர்ச்சனையாகுக என்று அர்ச்சித்தான். உண்மையான உள்ளத்தோடு செய்த வீமனின் சிவபூசையே பரம்பொருளைத் திருப்திப்படுத்தியது. பேருக்கும் புகழுக்கும் செய்த பூசைகள் பயன் பெறவில்லை.

அரும்பும் மலரும் ஆண்டவனைத்திருப்தி செய்யவேண்டுமாயின் உள்ளத்திலே உண்மையான ஆர்வம் இருக்கவேண்டும். அங்ஙனம் ஆர்வம் இல்லையேல் செய்யும் பூசையால் பயனொன்றும் இல்லை. ஆர்வம் இல்லாத பூஜை பயன்படுமாயின் இதுவரையிலே எத்தனை மரங்கள் செடிகள் மோட்சம் அடைந்திருக்கவேண்டும்.

சூரியனில்லாத நேரத்திலே எமது கண்ணை விளங்கச் செய்வதற்காகச் சிறுச்சிறு வெளிச்சங்களைப் பயன் படுத்துகின்றோம். எங்கும் எப்போதும் நீக்க மற நிறைந்து விளங்கும் பரமாத்ம சூரியனை எமது ஆணவத்திரை மறைத்துள்ளது. உள்ளத்திலே விளக்கேற்றினால் அப்பரமாத்ம சூரியனைக்கண்டுகளிக்கலாம். அத்தத்துவத்தை விளக்குதற்காகவே இறைவனது திருக்கோயிலில் விளக்கேற்றுகின்றோம். கருமையாக இருண்டிருந்த இறைவனது திருவுருவம் விளக்கேற்றிய உடனே பிரகாசிப்பதுபோல எமதுஇருண்ட உள்ளமும் ஆர்வமாகிய தகளியிலே அன்பெனும் நெய்யை ஊற்றி ஏற்றும் விளக்கினால் பிரகாசிக்கின்றது.

விளக்கேற்றிய உடனே முதன் முதற்செய்யுங்கிரியை தூபம் இடுதலாகும். எமது சுவாசத்திற்கும் எண்ணங்களுக்குந்தொடர்புள்

ளது. நல்லகாற்றைச் சுவாசிக்கும் போது நல்ல எண்ணம் உண்டாகுகின்றது. அசுத்த காற்றைச் சுவாசிக்கும்போது தகுதியற்றஎண்ணங்கள் உதிக்கின்றன. இறைவனரது திருஉருவை மனதிலேதியானிப்பதற்காக அவ்விடத்திலே உள்ள பவனத்தைத் தூபம் இடுதல் மூலம் முதலிற் சுத்தி செய்கிறோம், இறைவனரை எழுந்தருளச்செய்யும் எமது உள்ளத்திருக்கோவிலேயும் தூய எண்ணமாகிய தூபத்தினுல் பரிசுத்தப்படுத்தவேண்டும் என்பது தத்துவமாகும். குங்குலியக்கலயநாயனுர் இறைவனுருக்கு ஆர்வத்தோடுகூடிய தூபத்தொண்டுசெய்தே முத்தியடைந்தாரென்று பெரியபுராணம் கூறுகின்றது.

இப்படிப்பட்ட சரியை, கிரியை, யோகங்களை முறைப்படி அநுட்டித்து வந்தால் இறைவனுர் ஞானப்பழமாகக் காட்சி அளிப்பானும்.

*"தனித்தனிமுக் கனிபிழிந்து வடித்தொன்றுக் கூட்டிச்*
*சர்க்கரையுங் கற்கண்டின் பொடியுமிகக் கலந்தே*
*தனித்தநறுந் தேன்பெய்து பசும்பாலுந் தேங்கின்*
*றனிப்பாலுஞ் சேர்த்தொருதீம் பருப்பிடியும் விரவி*
*யினித்தநறுந் நெய்யளைந்தே யிளஞ்சூட்டி னிறக்கி*
*யெடுத்தசுவைக் கட்டியினு மினித்திடுந்தெள் ளமுதே"*

என்று வள்ளலார் வாயினிக்கப் பேசுகின்றார். இதனையே நாவுக்கரசர் "கரும்பினிற்கட்டிபோல்வார் கடவூர் வீரட்டனுர்" என்கின்றார்.

காலை மூழ்கல் சரியையும், மலர்களை இடுதலும், தூபமிடுதலுங் கிரியையும், ஆர்வத்தை உள்ளே வைத்தலும் பித்தர்க்குப் பத்தராதலும் யோகத்தையும், கரும்பினிற் கட்டிபோல இறைவனை அநுபவித்தல் ஞானத்தையுங் குறிப்பன. சரியை, கிரியை, யோகம்எனும் மூன்று படிகளிலுப் நின்று மேல் வருவார்க்கு ஞானங் கிட்டும் என்றார் நாவுக்கரசுப்பெருந்தகை. அவர் வாக்காலேயே கேட்டுப்பாருங்கள்.

*"பெருப்புலர் காலை மூழ்கிப் பித்தர்க்குப் பத்த ராகி*
*அரும்பொடு மலர்கள் கொண்டு ஆங்கு ஆர்வத்தைஉள்ளே வைத்து*
*விரும்பிநல் விளக்குத் தூபம் விதியினல் இடவல் லார்க்குக்*
*கரும்பினிற் கட்டிபோல்வார் கடவூர் வீரட்ட னரே."*

# நானும் எனது குருநாதரும்

[அ. இராமசாமி, ஜோகூர்பாரு, மலாயா.)

**யானைவரும் பின்னே மணியோசைவரும் முன்னே
குருநாதரின் உபதேசம் வரும்பின்னே என்
வாழ்வு சீர்பெற்றுவரும் முன்னே,**

உடுத்தும் உடை நான்காக இருந்தால், அதை மூன்றாகவோ அல்லது இரண்டாகவோ குறைத்துக்கொள் என்பது என தாருயிர்க் குருநாதரின் உபதேசம்.

இந்த உபதேசம் எனக்குகிடைப்பதற்கு வெகு நாள் முன்ன தாகவே, இப்பயிற்சியிலே நான் தேர்ச்சி பெற்றிருக்கிறேன். அதன் பயனாகக் குருநாதர் உபதேசத்தைமகிழ்ச்சியுடன் ஏற்கும்பாக்கியம் பெற்றேன்.

ஏவற்றொழில் பார்க்கும் நான் என்னை ஆதரிப்பவரால் பஞ்ச மான உடைகொடுக்கப்பெற்றேன். இதை எதிர்த்துப் பல முறை சண்டை செய்தும் பயனற்றுப்போயிற்று.

"தன் கையே தனக்கு உதவி என்பதுபோல் தினமும், தானே துவைத்துக்கட்டிக்கொள்ளவேண்டுமே தவிர, சலவைத் தொழிலாளரிடம்போடுவதற்கு உருப்படி பற்றாது..ஆனால் எனக்குக்கிடைக்கும் ஸன்லைட் சோப்புக்குப் பஞ்சமில்லை.

---

முற்பக்கத்தொடர்ச்சி

விடியற்காலத்தில் நீராடி, அருட்பித்தராகியபெருமானிடத்துப் பக்திபுடையவராய், அரும்புகளையும் பூக்களையும் கைக்கொண்டு அருச்சனை செய்வதில் ஆசையை மனத்தினுள் வைத்து, உள்ளன்போடு திருவிளக்கையும் தூபத்தையும் முறைப்படி இடவல்லவர்க்குத் திருக்கடவூர் வீரட்டத்துப் பெருமான் கரும்பினின்றும் பெற்ற வெல்லக்கட்டிபோல் இனியவராய் இருப்பார்.

சாதாரணமாகவும் சோப்போட்டும் எனக்கு துவைக்கத்தெரியுமே ஒழிய, சலவை செய்யும் முறைகள் தெரியாது. எனக்குத்தெரிந்த வேலையைச் செய்யமட்டிலுந்தான், என் காரியாலயமும்இடம் கொடுக்கும்.

என்னைவிட்டுப்பிரியாத ஏன் வேட்டியை என்கவனத்திலேயே தினமும் வெள்ளையாக்க முயலுவேன். சவுக்காரத்தை அதிகமாகத் தேய்த்துக்கும்முவேன். அது வெள்ளை நிறத்திற்குப்பதிலாக வேறு நிறமே மிகுதியாகிக் கொண்டு வந்தது. இதைத்தான் சிலபேர்குருட்டுஅழுக்கு என்று சொல்வார்கள்.

என தருமைக்குருநாதர் உடுத்தியிருப்பது முதல் நம்பர் காவியுடையானல், நான் கட்டியிருக்கும் வஸ்திரத்தை 4-ம் நம்பர் காவி உடை என்று சொல்லலாம். அவ்வளவு பழுப்பு நிறம்,

"நாளும் கிழமையும் நலிந்தோர்க்கில்லை" என்பதற்கிணங்க, நல்ல நாள் பெரிய நாள் என்பது எனக்கு இல்லை, எந்த நாளாக இருந்தாலும் ஒரே மாதிரியாகத்தோன்றும் பாக்கியம் பெற்றவன்.

விசேட நாட்களில்,என்னைக்கண்ணுறுப் சில அன்பர்கள், என்னைஏற இறங்கப்பார்த்து ஆலோசனை செய்வர் ஏன்? அந்தத்திருக்கூட்டங்களிலே. என்னைப்போல் வேறு ஒருவரைப்பார்க்க முடியாது. அதனுலேதான்.

சிற்சில சமயங்களில்தனி வாழ்வு வாழும் துர்ப்பாக்கியம்அடைந்தோமே! நம்மைப் போல் ஒருவரும் இல்லையே! என்று மனம் வெதும்புவேன், சுகவாழ்வு வாழலாம் என்றுதான் இந்தியாவிலிருந்து மலாயா வந்தோம். "காசிக்குப் போயும்கருமம் தொலையவில்லை" என்பது போல் இருக்கிறது. நம் வினைப்பயன். சுகவாழ்வு வாழ்வதற்கு இனி நான் எங்கே தான் போவது? இந்தத் தேசத்தையும் தாண்டி, இதற்கப்பாலிருக்கும் செய்கோன் போனல் ஒருவாறு நம் துன்பம் தீருமா? என்றெல்லாம் சொல்லிப் புலம்புவேன்,

கவலையிலேயே என் மனம் நைந்து நைந்து நாளடைவில் கவலையின் வலிமை நலிந்து போயிற்று.

# அநுமான்.

(காமகோடி)

இராமாயணம் ஒரு சிறந்த வாழ்க்கை நூல். நல்வாழ்வை விரும்பும் எவரும் அதனை உணரவேண்டும். உலகத்தின் ஒரு பிரதி பிம்பமே இராமாயணம் என்று கூறுதல் மிகையாகாது. இவ்வுலகத்தில் நாம் தோன்றியிருக்கிறோம். நம் வாழ்க்கைக்கு ஒரு லக்ஷியம் உண்டு. உயிருள்ள அளவும் நாம் உலகத்துக்குப் பயன்படவேண்டுமென்பதும், அவ்வாறு பயன்படும் முயற்சியின் வழியாகவே நம்மை நாம் கடைத்தேற்றிக்கொண்டு. நம் முடிந்த இலக்ஷியத்தை அடையவேண்டும் என்பதே நம் குறிக்கோளாக இருக்கவேண்டும். இந்த உண்மை ஒரு நாட்டுக்கு, ஒரு காலத்துக்கு என்ற கட்டுப்பாட்டுக்கு அடங்கியதன்று.ஜாதி.மத.பாஷைகளால்குறுக்கப்படுவதன்று.உண்மை எல்லோருக்கும் பொது: எல்லாக்காலத்துக்கும் பொது. இதனை

முற்பக்கத்தொடர்ச்சி

ஒரு நாள் காலையில், நான் வேட்டி துவைத்துக் கொண்டிருக்கும்போது, என் நண்பர் ஒருவர் வந்து, அண்ணே! என்னசெய்தி? என்றார். என்னிடம் செய்திக்கா பஞ்சம்? ஒரு முக்கியமான செய்தி ஒன்று சொல்கிறேன். கேளுங்கள்! என்றேன் அவரும் சிரித்தமுகத்துடன் என் சொல்லை எதிர்பார்த்தார்,

என் பெயர் அ. இராமசாமி என்பதன் அர்த்தம் என்ன தெரியுமா? என் தந்தையார் அழகிரிதாசர் என்பதற்கு மட்டுமல்ல, இந்த அ. விலாசம் அழுக்கு வேட்டி இராமசாமி என்பதற்கும் பொருந்தும்.

நான் சொல்வது என் வாழ்வுக்கு ஒத்ததாக இருக்கிறதா?இல்லையா? என்பதை நீங்களே சரிபார்த்துக் கொள்ளுங்கள் என்றேன் அவர் விலாவலிக்கச் சிரித்தார்.

இந்த மாதிரி யெல்லாம் அனுபவம் பெற்றபிறகுதான். எனது குருநாதர் உபதேசம் எனக்குக்கிடைத்தது.

ஒரு நூல் எடுத்துக்காட்டுமானால், அதனைச்சிறந்த வாழ்க்கை நூலென்று சொல்வதில் ஐயமென்ன? திருக்குறளை அத்தகையநூலென்று உலகம் இன்று அறிகிறது. திருக்குறளில் காட்டிய வாழ்க்கைமுறைகளைத்தான் கதை மூலமாகவும், பாத்திரங்கள் மூலமாகவும் இராமாயணம் புகட்டுகிறது. குறளிலில்லாதது இராமாயணத்திலில்லை, இராமாயணத்தில் இல்லாதது குறளில் இல்லை. குறள் அமிருதமானால், இராமாயணம் அமிருதத்தைத் தேனில் குழைத்த தேவாமிருதம். ஆகவே, இராமாயணம் தன் வாழ்க்கையை நேர்முறையிலே அமைக்க விரும்பும் எவனும் உட்கொள்ளவேண்டிய தேவாமிர்தமாக அமைகிறது.

ஸ்ரீ ராமர் புருஷ சிரேஸ்டர்: வீரர்களுள் இணையற்றவீரர்: குணக்கடல், சான்றாண்மைக்குச் சான்று, அவர் சக்ரவர்த்தியின் மூத்த திருமகனாகப் பிறந்தவர். இவ்வளவு சிறப்புக்களுடன் தோன்றியும் அவருக்கு உண்டானஇன்னல்களுக்கு அளவேஇல்லை. அவை யாவும் அவரின் அருங்குணங்களுக்குச் சான்றுகளாகவே ஆயின இதுவே வாழ்க்கை. நன்மையும், தீமையும் கலந்ததே அது. நன்மை கண்டு கர்வங்கொள்ளாமையும் தீமையினால் நம் குணத்துக்குக் கேடு வராமையுமே வாழ்க்கையில் வெற்றியடைய மார்க்கங்கள். இவ்வாழ்க்கைப்பாதை மிகக் கரடுமுரடானது. அவ்வழியில்செல்பவருக்குச் சிறந்த மனோபலமும், பக்கபலமும் வேண்டும். சில சமயங்களில் பக்கபலத்தின தன்மையே மிக உயர்வாக இருக்கும். இராமருக்கு ஏற்பட்ட பக்கபலன்கள் மிகமிக அருமையானவை. அவற்றுள் ஸ்ரீ சீதா பிராட்டி தலை சிறந்தவள், அவளுக்கு நிகராக, அல்லது அடுத்தபடியாக அமைந்த பலம் அநுமான்,

அநுமான் இராமாயணத்தேருக்கு அச்சாணி. அவர் கல்வியின் கரைகடந்தவர். பிரத்தியக்ஷ தெய்வமான சூரிய நாராயண மூர்த்தியே அவருடைய குரு. தேக பலத்தில் இணையற்றவர். சுக்ரீவ மன்னனுக்குக் கஷ்டம் வந்தபோது அவனுக்குக் கண்ணும்கவசமுமாக நின்று அவனைக் காத்துவந்தார். அவரே அவனுக்காக இராமபிரானை முதன்முதலில் சந்தித்து அம்மன்னனுடன் சிநேகம் செய்து வைத்தார். அவரைப்பார்த்தவுடன் இராமருக்கு அவருடைய அருங்குணங்களெல்லாம் பளிச்செனப்பட்டன. அவர் இலக்ஷ்மணனிடம்.

மாணியாம் படிவ மன்று மற்றிவன் வடிவ மைந்த
ஆணியிவ் வுலகுக் கெல்லா மென்னலா மாற்றற் கேற்ற
சேணுயர் பெருமை தன்னைச் சிக்கறத் தெளிந்தேன் பின்னர்க்
காணுதி மெய்ம்மை யென்று தம்பிக்குக் கழறிக் கண்ணன்.

'இவன் உருவத்தைக்கண்டு மயங்காதே: இவனே உலகுக்கெல்லாம் ஆணியாவான்: இவன் ஆற்றலையும் அதற்கேற்ற பெருமையையும் கண்டேன். இவ்வார்த்தையின் உண்மையை நீ காணப்போகின்றாய்'' என்று கூறினார் என்றால், இவருடைய பெருமையை நாம் அறிந்துரைக்கக் கூடுமோ?

அநுமாருடைய சமயோஜித புத்தியையும், சொல்லின் திறமையையும் நாம் கிஷ்கிந்தாகாண்டம் முதல் இராமாயணம் முழுமையுமே காண்கிறோம். அவருடைய ஆற்றலைக் கடல் தாவினபோதும் இலங்கையை எரித்தபோதும், சஞ்சீவி மலையைக் கொண்டுவந்தபோதும் கண்டோம். அவருடைய சமய உதவியைக் குறித்து, சீதாபிராட்டி கூறியதைவிட யார் அதிகச் சிறப்புடன் கூறப்போகிறார்கள், இராவணன் கொடுமை ஒரு பக்கமும், இராமபிரானிடமிருந்து யாதொரு செய்தியும் தெரிய மாட்டாத துக்கம் மறுபக்கமுமாக நின்று அவளை வதைக்க, அங்கிலையிலிருந்து தப்ப ஒருவழியையும் காணாமல் தற்கொலை செய்துகொள்ள முயற்சிக்கையில் அவளுக்கு உயிர்கொடுத்த பெருமை அநுமாருடையதன்றோ?

மும்மையா முலகந் தந்த முதல்வற்கு முதல்வன் தூதாய்
செம்மையா லுயிர்தந் தாய்க்குச் செயலென் னெளிய துண்டே
அம்மையா யத்த னாய அப்பனே அருளின் வாழ்வே
இம்மையே மறுமை தானும் நல்கினை இசையோ டென்றாள்

பின்னும்,

பிரமாஸ்திரத்தால் மூர்ச்சித்துக் கிடந்த தம்பியைப் பார்த்து இராமர் தாமும் உயிர்விடத் துணிந்தார். அப்பொழுது அநுமாரே சஞ்சீவிமலையைக் கொண்டு வந்து அனைவரையும் எழுப்பினார், இவ்வுதவியை எண்ணி இராமர் அநுமாரை நோக்கி,

அழியும் கால்தரும் உதவி ஐயனே
மொழியுங் கால்தரும் உயிரின் முற்றுமே

*பழியும் காத்துஅரும் பகையும் காத்தெமை*
*வழியுங் காத்தனை மறையும் காத்தனை*


என்று வாழ்த்தினார். இன்னும் இராவண ஸம்ஹாரம் முடிந்துஇராம பட்டாபிஷேகம் நடந்தேறியபோது பிறருக்கெல்லாம் ஏற்றபடி வெகுமதியளித்துவிட்டு, ஸ்ரீ ராமர்,

*மாருத விமல சேயை மகிழ்ந்தினி தருளி னோக்கி*
*"ஆருத விடுதற் கொத்தார்" நீயலால்? அன்று செய்த*
*பேருத விக்கியான் செய்செயல் பிறிதில்லை; மெய்ப்பூண்*
*போருத வியதிண் டோளாய்! பொருந்துறப் புல்லு கென்றான்*

எவ்வளவு அருமையான சம்மானம்!

இத்தகைய பெருமை பெற்ற ஆஞ்சநேயரிடம் அமைந்த சிறப்பியல்களுள் இரண்டு நம் மனதை அதிகம் கவர்வன, ஒன்று அவருடைய இராம பக்தி; மற்றொன்று அவரது அடக்கம். அவர் தமக்கு இன்னல் வந்தபோதெல்லாம் இராமரின் பெயரை ஜபித்தே வெற்றி பெற்ற வரலாறுகளை நாம் இராமாயணம் முழுமையும் காண்கிறோம்; அவர் ஜிதேந்திரியரான்தால் அடக்கம் அவரிடம் இயல்பிலேயே அமைந்திருந்தது. 'ஆன்று, அவிந்து, அடங்கிய கொள்கைச் சான்றோர்' என்றதற்குச் சான்றாக அமைந்த அநுமார் நம் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமைவாராக.

இராமாயணம் உலகுக்கு எத்தகைய வழியை வகுத்துக்கொடுத்திருக்கிறதென்பதை ஊன்றி உணர்வோமாக. இராமாயணவழியில் உலகம் நிற்கவேண்டுமென்று கருதத்தொடங்கினவுடன் அதன் க்ஷேமமும் உதயமாகிவிடும்.



# ஏசுநாதரின் நல்லுரைகள்

[தென்னாப்பிரிகா, டர்பன், திரு. ச. மு. பிள்ளை அவர்கள்]

வெளியாக்கப்படாத மறைபொருளும் இல்லை; அறியப்படாத இரகசியமும் இல்லை. நான் உங்களுக்கு இருளிலே சொல்லுகிறதை நீங்கள் வெளிச்சத்திலே சொல்லுங்கள்; காதில் கேட்கிறதை நீங்கள் வீடுகளின்மேல் பிரசித்தம் பண்ணுங்கள்.

இடுக்கமான வாசல் வழியாக உள்ளே பிரவேசியுங்கள்; கேட்டுக்குப் போகிற வாசல் விரிவாகவும், விசாலமாகவும் இருக்கிறது. அதன் வழியாகப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர். ஜீவனுக்குப் போகிறவாசல் இடுக்கமும் நெருக்கமுமாக இருக்கிறது. அதைக் கண்டுபிடிப்பவர்கள் சிலர். கள்ளத்தனமான தீர்க்கதரிசிகளிடம் ஜாக்கிரதையாக நடந்துகொள்ளுங்கள், அவர்கள் ஆட்டுதோலைப் போர்த்துக்கொண்டு உங்களிடத்தில் வருவார்கள்: உள்ளத்திலே அவர்கள் கொன்று தின்னும் ஓநாய்கள்.

குருடர்களாக இருக்கும் வழிகாட்டிகளே! கொசுவில்லாத படி வடிகட்டிக்கொள்ளும் நீங்கள், ஒட்டகத்தை விழுங்கிறவர்களாக இருக்கிறீர்களே!

மாயக்காரர்களாகிய வேதபாரகர்களே! ஐயோ, போஜன பாத்திரங்களின் வெளிப்புறத்தைச் சுத்தமாக்குகிறீர்கள்; அவற்றின் உட்புறத்திலோ கொள்ளையும் அநீதியும் நிறைந்திருக்கின்றன. குருடனான பரிசேயனே! போஜன பாத்திரங்களின் வெளிப்புறம் சுத்தமாகும்படி, அவற்றின் உட்புறத்தைச் சுத்தமாக்கு.

பணக்காரன் பரலோக ராஜயத்தில் பிரவேசிப்பது அரிது என்பதை மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

உன்கண் உனக்கு இடையூறுசெய்தால், அதை உடனே பிடுங்கி எறிந்துவிடு. இரண்டு கண்ணுடையவனாய் எரி நரகத்தில் தள்ளப்படுவதைப்பார்க்கிலும், ஒற்றைக்கண்ணனாய் ஜீவனுக்குள் பிரவேசிப்பது உனக்கு நன்மை பயக்கும்.

தன் மனைவி விபசாரம் பண்ணுகிருள் என்பதைத் தவிர வேறு எந்தக் காரணத்தை முன்னிட்டும் ஒருவன் வேருெருத்தியைக் கல்யாணம் பண்ணிக்கொண்டால், அவன் தான் தவறுசெய்வதுடன் அவள் விபசாரம் பண்ணவும் காரணமாக இருக்கிருன்.

கதவைப் பூட்டிக்கொண்டு, அந்தரங்க சுத்தியுடன் கடவுளை நோக்கித் தியானி. அதற்கு நிச்சயம் பலன் உண்டு.

பிறர் உன்னைப் போற்றவேண்டும் என்பதற்காக, அவர் காண தான தருமங்களைச் செய்யவேண்டாம், உன் வலதுகை செய்கிற தானத்தை உன் இடதுகை அறியாதிருக்கட்டும். அவ்விதமான தருமத்திறல் பலன் உண்டு.

உண்ணுவிரதம் இருக்கும்பொழுது சில கபடர்களைப்போல் நீங்கள் முகவாட்டமாக இருக்கவேண்டும். நீங்கள் விரதமிருப்பது மனிதர் எவர்க்கும் தெரியாதவாறு முகத்தைக் கழுவி தலைக்கு எண்ணெயிடுங்கள். எதையும் காணும் சக்தியுள்ள கடவுள் நீங்கள் உபவாசமிருப்பதை அறிந்து பலனளிப்பார்,

கோவில் குளங்களுக்குச் செல்வதையும், சாஸ்திரங்களைப்படிப்பதையும் மட்டும் வைத்துக்கொண்டு இரக்கத்தையும் உண்மை பக்தியையும் நீங்கள் கைவிட்டுவிட்டீர்கள்.

நான் மனுஷர் பாஷைகளையும் தூதர் பாஷைகளையும் பேசினும் அன்பு எனக்கிராவிட்டால் சத்தமிடுகிற வெண்கலம் போலவும் ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருப்பேன்.

அன்பு நீடித்த சாந்தமும் தயவுமுள்ளது. அன்புக்குப் பொருமையில்லை; அன்பு தன்னைப் புகழாது: இறுமாப்பாயிராது: அயோக்கியமானதைச் செய்யாது: சினமடையாது; தீங்குநினையாது.

அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படவேண்டும்.

நன்மை செய்யப் படியுங்கள். ஒடுக்கப்பட்டவர்களை ஆதரித்து திக்கற்றபிள்ளைகள் விதவைகளின் வாழ்க்கையைப்பற்றி விசாரியுங்கள்

# செய்தித் திரட்டு

## வைகாசி அனுடம் வள்ளுவர் திருநாள்

### இவ்வாண்டுத் திருவள்ளுவர் திருநாள் மே 24 வியாழக்கிழமை (24-5-56)

பல காரணங்களாற் பிளவுபட்டுக் கிடக்கும் தமிழினத்தை மாத்திரமன்றி உலகம் முழுவதையுமே ஒன்றுபடுத்தும் ஆற்றல் திருக்குறளுக்கே உரியதென்பதையும், அதன் ஆசிரியருடைய திருநாளை யாவருங் கொண்டாடச்செய்தல் எல்லா மக்களையும் ஒருமுகப்படுத்துதற்குச் சாலச் சிறந்ததொரு வழியென்பதையும் யாவரும் அறிவார்கள். எல்லாருஞ் சேர்ந்து கொண்டாடத்தக்கதான ஒரு நாளில்லாத குறையை நீக்கவும், வள்ளுவருடைய அரிய கருத்துக்கள்—வாழ்வாங்கு வாழும்நெறிகள்—வளர்ந்தவர்களுடைய உள்ளங்களில் மாத்திரமன்றிக் குழந்தைகளுடைய உள்ளங்களிலும் வேரூன்றிப் பயனளிக்கத் தமிழரின் தனிப்பெருந் திருநாளாக—ஆண்டுதோறும் யாவரையுங் கொண்டாடச்செய்ய எண்ணினோம்.

சென்ற மூன்று ஆண்டுகளிலும் **வைகாசி அனுடத்தை** வள்ளுவர் திருநாளாகக் கொண்டாடுமாறு அறிக்கைகள் வெளியிட்டுத் தமிழ்மக்கள் வாழும் இடங்களெங்கும் இந் நாளைக் கொண்டாடச் செய்தோம். எண்பதுக்கு மேற்பட்ட பத்திரிகைகள் எம்முடைய அறிக்கைகளை வெளியிட்டும், இந்நாளைப்பற்றி ஆசிரியர் உரை, குறிப்புரை முதலியன எழுதியும், திருவள்ளுவர் திருநாள் மலர் வெளியிட்டும் எமது முயற்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் நல்கின. தமிழ்நாடு, வடஇந்தியா, இலங்கை, பர்மா, மலாயா, சிங்கப்பூர், தென் ஆபிரிக்கா, பீசி முதலிய பல இடங்களிலுமுள்ள நூற்றுக்கணக்கான சங்கங்கள் இந்நாளைச் சிறப்பாகக் கொண்டாடின. சிங்கப்பூர், கொழும்பு, தெல்லி, திருச்சி, சென்னை வானொலி நிலையங்கள் இந்நாளன்று சிறப்பு நிகழ்ச்சிகளை ஒலிபரப்பின. சாதி மத அரசியற் கட்சி வேறுபாடுகளின்றித் தமிழ்ப்பெருமக்கள் பலர் ஆதரவளித்தனர்.

## வேண்டுகோள்-

தமிழினைப் பேசும் மக்கள் யாவரும் ஒன்றுபட்டு ஆண்டுதோறும் ஒவ்வொரு வீட்டிலுங் கொண்டாடுந் திருநாளாகத் திருவள்ளுவர் திருநாளை நன்குநிலைத்திடச் செய்தல் தமிழ்ப் பெருமக்களுடைய பெருங்கடனாகும், இதனை நன்கு நிறைவேற்றுதற்குச் செய்யவேண்டிய பணிகள் சிலவற்றை ஈண்டுக் குறிப்பிடுகிறோம். தமிழினத்தின் ஒற்றுமைக்காகவும். தமிழ் மக்களின் நல் வாழ்வுக்காகவும் தமிழ் மொழியின் வளர்ச்சிக்காகவும். இவற்றைச் செய்தருளுமாறு அன்பர்கள் யாவரையுங் கேட்டுக்கொள்கிறோம்

1 பத்திரிகைகளும் சங்கங்கள், கல்விச்சாலைகள் முதலிய பொது நிலையங்களும் வைகாசி அனுடத்தை வள்ளுவர் திருநாளாக ஒவ்வொரு வீட்டிலுங் கொண்டாடுமாறு வற்புறுத்திக் கொண்டாடச் செய்தல். கொண்டாடும் முறைபற்றி அறிக்கைகள் வெளியிடல்,

2. பத்திரிகைகள் யாவும் திருவள்ளுவர் திருநாள் மலர் வெளியிடுதல். [சென்ற ஆண்டிலே பல பத்திரிகைகள் வெளியிட்டன.]

3 சங்கங்கள். மன்றங்கள், கழகங்கள், கல்விச்சாலைகள் முதலியன திருவள்ளுவர் திருநாளன்று பெருவிழாக்களை நடத்தல்,பேச்சுப் போட்டி. கட்டுரைப் போட்டி, பாட்டுப் போட்டி, திருக்குறள் மனனப்போட்டி முதலியன நடத்தல்.

4 வள்ளுவர் திருநாளாகிய வைகாசி அனுடத்தை அரசினர் விடுமுறை நாளாக்குவித்தல்.

5 நாட்குறிப்பு, நாட்காட்டி, பஞ்சாங்கம் முதலியன வெளியிடுவோர். இவற்றிலே வைகாசி அனுடத்தை வள்ளுவர் திருநாளாக ஆண்டுதோறுங் குறித்தல்,

6 யாவருந் திருவள்ளுவர் தொடர் ஆண்டை வழங்குதல்,

**இந்த ஆண்டுத் திருவள்ளுவர் திருநாள் 24-5-56 வியாழக்கிழமை ஆகும்**

இந்த நாளை யாவரையுங் கொண்டாடுமாறு செய்தற்கு, இப்பொழுது தொடக்கமே முயலுதல் இன்றியமையாதது. இத் திருநாளுடன் சில நாள்களைச் சேர்த்து வள்ளுவர் வாரமாகவுங் கொண்டாடலாம், இத் திருநாட் கொண்டாட்டம்பற்றி அன்பர்கள் செய்யும் முயற்சிகளை எமக்கு அறிவித்தால் அவற்றை எமது அறிக்கையிற் சேர்த்து வெளியிட முயல்வோம்,

*18,2 அத்திடியா வீதி,*
*இரத்துமலானை, இலங்கை,*
*தை-க, தி. ஆ. 1987.*



## அந்தர் யோகம்.

கண்டி தன்னக்கும்புர, சச்சிதானந்த தபோவனத்தில் திவ்ய ஜீவன சங்க ஆதரவில் 30-3-56 அதிகாலை தொடங்கி 1-4-56 பிற்பகல் வரை ' யோகிராஜ்"

### ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகளின்

தலைமையில் நடைபெற்றது-

75க்கு அதிகமான சாதகர்கள் மூன்று நாட்களிலும் பங்குபற்றினர், பிரார்த்தனை, பஜனை, பிராணாயாமப் பயிற்சிகள், ஜபம்.தியானம், மௌனம், இலிகித ஜெபம், பூஜை ஆசனப்பயிற்சிகள், ஆத்மீக உபதேசங்கள் என்பன முக்கிய இடம் பெற்றன. தோட்டப் பகுதிகளில் சென்று ஞாயிற்றுக்கிழமை தோறும் சேரித்தொண்டு செய்வதாக சுவாமிகள் தலைமையில் தொண்டர் சபை ஒன்றுதெரிவு செய்யப் பெற்றது.

# சிருட்டி மனிதன்.

(வீரைக்கவிஞர் கா. நெல்லையப்பர்]

ஆ...ஆ.....இதென்ன? மேடையிலே—வீசுகின்ற மெல்லிய பூங்காற்றோ? என இனிது வீசும் தென்றல்காற்றில்த் தன்சிந்தையைப்பறி கொடுத்தான்.

என்னே! நறுமணம், எங்கிருந்தெழுந்ததோ?—இயற்கை மணமோ?—செயற்கை மணமோ? சுகந்த மணத்தைத்தெளிந்து கூற முடியவில்லையே!—

தளிர்மலர் மணமோ?—தமிழ்ப்பெருமணமோ?—சாற்றகிலேன்—எனச் சுகந்த மணம் வந்தவழி சிந்தையைச் செலுத்தினான். திசையெங்கணும் பரிணமிக்கும்—இந்தத் தென்றல்—காமன்விடுத்த தூதோ?—கற்பனைப் பாடலில் கலந்துவந்த காற்றோ? யாதோ அறிபோம்—என்று எண்ணமிட்டவனாக—ஆம் மென்காற்றில் வீசுகின்ற—சுகம். இதுதானென்று—காற்றின் சுகத்தில் கருத்தை இழந்தான். சுகத்தில் உறுபயனை—இனி என்று அடையப்போகிறோமென்று—இயற்கைக் காதல்—எழுச்சிஉந்த காதல் வேட்கையனானான் நம் கட்டழகன்.

அன்பெனும் காதலின் அரும்பு செந்தீ—பரந்துகொழுந்து விட்டெறிய--தென்றலெனும் துருத்திஊத உதவிற்று.

ஆ...ஆ.....இதென்ன? யார்பாடுகிறார்கள்! இனிமையான பாடற்குரல் கேட்கப்படுகிறதே!—என்னே! தமிழ்ப்பாடலின் இனிமை! -யாழும் குழலும் இழுமென் இசையும் இதற்குத் தோற்குமே! —கிண்கிணிச் சிறுவர்—குழறும் மழலை மொழியும்—மதுரத்திற் குறைவுபடுமே! பண்காந்தாரம் பரவிடும் பாடலோ? சப்தசுரங்கள் —தளிர்பாடற்கொத்தோ? தாளக்கோப்பொடு-சமைந்த சங்கீதமோ?

சுருதியும் இசையும் தொனித்திடும் அமைப்போ?
கற்பனை, நிரவல், கலந்த ஆலோபனையோ?
மருதம் குறிஞ்சி வளமுயர் பண்ணோ?
வாய்த்த முல்லை வளர்சுவைப் பண்ணோ?

நெய்தற் பண்ணோ? நிகழ்த்தவும் அறியேன்!
பாலைப்பண்ணோ!—பாடல் நலமோ?

உள்ளம் உருக்கும் உயர் சங்கீதமே! தெள்ளத் தெளிந்த தீஞ் சுவைப் பாடலே! கொள்ளைகொண்டு குடிக்குதென் ஆவி.

விள்ளவும் ஆற்றேன், விழுங்கவும் ஆற்றேன். உள்ளமெல் லாம் சிலிர்க்க உடைட்பெடுத்த வெள்ளமே! நெக்குநெக்குருகா நின் றயர்கின்றேன்! பாடற் சுவையிற் பரவசமுற்றேன் தேடக்கிடை யாத் தீஞ்சுவைப்பாடலே!

உன்குரல் கேட்க—என் உடம்பு தானுகை—ஆடுகிறதே—ஆ... ஆ... ஆடல், ஆடல், பாடலுக்கு ஏற்ற பரவச ஆடல்தான்! பரத நாட்டிய பண்பமைந்ததுதான் ஆடுகிறேன்—ஆ......ஆடையிலே ஏலமணக்கும் மணவாட்டி, மணவாட்டி......ஆ ஆ. ஆ. எங்கே! எங்கே! என்று தன்னிலை கெட்டுத் தளர்ந்து அப்படியே--வேர ற்ற மரம்போல் தடாரெனத் தரையிற் சாய்ந்தான், தகைபெருஞ் செம்மல், காதல் உத்வேகம் கலந்த கட்டழகன்.

என்னே! நம் ஏந்தல்! காதல் வேட்கையாற் கரைந்துருகின் ருன். ஆதரவின்றி—அநாதியானுன். அவன்து காதல் வெட்பந் தீர—மருந்தொன்று அளித்தல் அவசியமே—நலமுமஃதேயாம். அவ னது விளையாடல் எல்லாம்—கிட்டைமூலம் கண்டறிந்தோம், இனி அவனைக்காதல் நோயினின்றும் விடுவிக்கவேண்டும்.

காமன்செய்யும் போருக்கு நாமென்செய்வது? இயற்கை வே கம்—அவனைச் சதிசெய்கிறது, அமைதியும் கொந்தளிப்பும் ஏற்படு வது உலகியல்பு, அவனைத் தடுத்து ஆட்கொள்ளவேண்டும் அது வே எனது விருப்பம், என் கடமையும் ஆகும். எம்மால் சிருஷ் டிக்கப்பெற்ற மனிதன் இன்னல் உறுவதென்ருல் அதனைச் சகித் துக்கொண்டிருப்பது முறையாகாது. உலகியல்த் துன்பங்களிற் கிடந்து அல்லலுறும் மக்களைக்கண்டு—பரிதவிக்கும் எனக்கு—எ னது சிருட்டி யனிதனிடத்தில் கருணையும் இரக்கமும் பிறந்தது என் பதில் வியப்பில்லையல்லவா?

[தொடரும்]

# ஸ்ரீ சுவாமி சிவானந்தாவின் பொன் மொழிகள்.

1 நவநாகரீகம் நிறை நானிலத்துய்யா.

2, மாயையின் மகத்துவம் மாந்தருக்கு நலம்தரா.

3 காமத்தின் உரவினம் ஞானத்தின் பாஸாணம்

4 காலத்தைப் பொறுத்து காரியம் கைகூடும்.

5 சோதனை தீர்க்க சாதனை பூர்த்தி கொள்.

6 ஸ்திரீயின் பாசம் ஜீவனுக்கு நாசம்,

7 நாயகனை நம்பான் நாயகிக்கு உழைப்பான்.

8 தாயை மறந்து வாய்புடைக்கக் கொள்ளவோ.

9 பந்துவும் பணமும் சந்தையின் மந்தை.

10 கொடை பெரிதென நினைப்போர், நடைபழக்கிக்களைப்பர்.

11 நடையறிந்து பின்னே உடைபூண்டு கொள்ளு.

12 இடைதெரியா ஞானி கடைகாணவியலான்.

13 மலைபோன்ற நிதியும் புலை காண நீராம்

14 கலைபயிலாக் காலம் சிலையெனக் காட்டும்.

15 சண்டையின் தத்துவம் நிலையறிந்து நிற்றல்


16 பழியதைப் போக்க விழியதை மூடு.

17 நாதத்தின் விந்தை நானிலத்திற்கே புதுமை.

18 வேதத்தின் பெருமை வேகத்தால் விளங்கும்,

19 கீதத்தின் சாரம் கீர்த்தனத்தில் காணும்,

20 தாகத்தைப் போக்க மோகத்தை மறந்திடு.



# கடைவீதியில்.

[வினோபாஜி)

•••○O○•••

கடை வீதி பற்றிய ஒரு எளிய உதாரணம் தருகிறேன். நாம் ஏதேனும் ஒரு பொருள் வாங்கக் கடைவீதிசென்றால், எவ்விதம் நடந்து கொள்கிறோம். கடைக்காரருக்கும் வாங்குபவருக்குமிடையேயுள்ள சம்பந்தம் எப்படி என்றுபாருங்கள், அவர்களுக்கிடையே அன்பு கலந்த தொடர்பு இருக்கிறதா என்ன? எவ்வளவு கூடுமோ அவ்வளவு லாபம் சம்பாதிக்கவேண்டுமென்று கடைக்காரன் சிந்திக்கிறான். நாலணா விலையுள்ள ஒரு பொருளுக்கு பத்தணா அல்லது பன்னிரண்டணா விலை சொல்கிறான். வாங்குபவர் எப்பேர்ப்பட்டவர் சாமார்த்தியசாலியா? ஏமாந்தவர் என்று பார்த்துக்கொள்கிறான். ஏமாந்தவர் என்று தெரிந்தால் அவன் விலையைக் கூட்டிச் சொல்கிறான். பின்பு அவ்விருவருக்குமிடையே வெகுநேரம் பேரம் நடைபெறுகிறது. கடைசியில் பத்தணாவுக்கு அந்தப் பொருளைத் தருகிறான். தான் ஏமாறவில்லையென்று வாங்கியவர் நினைக்கிறார். கடைக்காரன் "நான் வாங்குபவருக்குத் திருப்தியும் அளித்தேன், ஏமாற்றவும் செய்தேன்" என்று நினைக்கிறான். வாங்குபவர் சாமர்த்தியசாலியாயிருந்தால் இதே பேரத்தை நாலைந்து அணாவில் முடித்திருப்பார், சாமார்த்தியமான கடைக்காரனும் வாங்குபவனும் ஒருவரை ஒருவர் ஏமாற்றப் பார்க்கின்றனர். இதுபோலவே தான் இந்தியா முழுவதிலும் வியாபாரம் நடைபெறுகிறது.

எந்த மாகாணத்திலும் சரி ஏதேனுமொரு சிறுவனைக் கடைக்கனுப்பினால் அவனைக் கட்டாயம் ஏமாற்றிவிடுவார்கள், இவன் நமது பையன் இவனுக்குச் சரியான விலையில் சரக்குக் கொடுக்கவேண்டும் என்று கடைக்காரன் நினைப்பதில்லை. கடைக்காரனது மனதில் வாஞ்சையும் கிடையாது, தர்மபுத்தியும் கிடையாது. பையனை எப்படி ஏமாற்றுவது என்றுதான் சிந்திக்கிறான். இம்மாதிரி நடக்கும்போது அந்த நாடு எவ்வாறு முன்னேற்றமடையும்?



Regd, at the G. P. O. as a News Paper H. D, 59/300

# துர்முகிவருஷ திருக்கணித பஞ்சாங்கம்

யாழ்ப்பாணம் மட்டுவில் திரு. சி. சுப்பிரமணிய ஐயர் F. R. A. S. அவர்களால் கணிக்கப்பெற்றது.

இந்திய அரசாங்கத்தாரால் ஏற்படுத்தப்பெற்ற பஞ்சாங்க சீர்திருத்த சபையினர் மேற்படி பஞ்சாங்கத்திற்கு முதலிடம் கொடுத்துள்ளனர். காரணம் கணிப்புமுறை மிகச்சுத்தமாக அமைந்துள்ளது. ஒவ்வோர் ஆஸ்திகர்களினது இல்லங்களிலும் தவறாது இருக்கவேண்டியது. வேண்டுவோர் பின்வரும் விலாசத்திற்கு எழுதிப்பெற்றுக்கொள்ளவும்.

**சி. சுப்பிரமணிய ஐயர்**
"தில்லை வாசம்" மட்டுவில், சாவகச்சேரி

---

## பின்வரும் நூல்கள் விற்பனைக்குண்டு

| | |
|---|---|
| World is God *சுவாமி இராமதாசர் நல்லபதிப்பு* | 5.50 |
| *சாதாரண பதிப்பு* | 4.50 |
| Mother Krishna Bai's Renuneiation | 8.00 |
| *கீதைப்பேருரைகள் விநோபாஜி* | 1.50 |
| *ஸ்ரீமத் பகவத்கீதை சுவாமி சித்பவானந்தர்* | 6.00 |

*மேற்குறிப்பிட்ட விலைகள் தபாற்செலவுட்பட*

ஆத்ம ஜோதி நிலையம் நாவலப்பிட்டி



## புதுவருட வாழ்த்து

'இன்றுபோல் என்றும் வாழ்க'

ஆத்மஜோதி நிலையம். நாவலப்பிட்டி.

Hony. Editor, K. Ramachandra,
Printed & Published by N, Muthiah, Athmajothi Nilayam, Nawalapitiya
At Saravana Press, Nawalapitiya 13-4-56